IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No. 141/2018 Date: 08.01.2024

PW3 - ராஜாக்கவுண்டர்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சின்னம்மாள் சகோதரர் செல்லமுத்துவை எனக்கு தெரியும். அவர் பல நபர்களிடம் கடன் வாங்கி அவர் மீது இதே நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. பேட்டரி கடை பிரச்சினை சம்மந்தமாகதான் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால், அதில் நான் கலந்து கொள்ளவில்லை. தாவா சொத்தை செல்லமுத்துவின் மகன்கள் தான் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

ராமசாமிகவுண்டர் இறந்து சுமார் 33 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். அவர் இறந்து போன தேதி, மாதம், வருடம் எனக்கு தெரியாது. செல்லமுத்து இறந்த தேதி, மாதம், வருடம் தெரியாது. பொன்னாகவுண்டர் (எ) நல்லாகவுண்டர் இறந்த தேதி, மாதம், வருடம் தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது. நான் சொன்ன பஞ்சாயத்து நடந்த தேதி, மாதம், வருடம் தெரியாது. வாதி பிரதிவாதிகளின் வாதம், எதிர்வாதம் பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு திருமணமாகி 70 வருடங்களுக்கு மேல் இருக்கும். அவரை நாகிசெட்டிப்பட்டியில் திருமணம் செய்து கொடுத்தார்கள். அப்போது முதல் அவர் அங்கு தான் குடும்பத்துடன் வசித்து வருகிறார். வாதி அனுபவித்து வருவதாக சொல்லும் சொத்தின் 4 எல்லைகள் தெரியாது. அதன் சர்வே எண் தெரியாது. வாதி தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருப்பதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. ராமசாமி தன்னுடைய பாகத்தை பிரித்து தனியாகத்தான் சுமார் 30, 40 வருடங்களாக ஓட்டி வருகிறார். அந்த சொத்திற்கும், வாதிக்கும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் சம்மந்தம் இல்லை. வழக்கின் விவரம் தெரியாமல் வாதிகள் கேட்டுக்கொண்டபடி பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- ராஜாக்கவுண்டர்

Sd/- N. பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.